தமிழ்நாட்டை முற்றிலுமாக புறக்கணிக்கிறீர்கள்

குஜராத் முதலமைச்சராக இருந்தபோது மாநில உரிமைகளை பேசினீர்களே? இன்று அதை மறந்தது ஏன்?

பிரதமருக்கு ஸ்டாலின் கேள்வி

சென்னை, பிப். 12–

"குஜராத் முதலமைச்சராக இருந்தபோது மாநில உரிமைகளைப் பேசிய பிரதமர் மோடி, பிரதமரானதும் மாநிலங்களை மறந்தது ஏன்?" என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

நேற்று (11–ந் தேதி), முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக கள்ளியாகுமரி மாவட்டத்தில் உள்ளாட்சி தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பேசியதாவது:–

இதுவரை நாம் கேட்ட நிவாரண நிதி ஒன்றிய அரசிடமிருந்து வரவில்லை. எப்போது முழுவதுமாக வழங்குவார்கள் என்பதும் தெரியவில்லை. மழை வெள்ள நிவாரண நிதி மட்டுமல்ல, நாம் கேட்ட எந்தப் பேரிடர் நிவாரண நிதியையும் இதுவரை முழுதாகத் தரவில்லை. பிரதமருக்குக் கடிதம் எழுதியாயிற்று. ஒன்றிய அமைச்சர்களை நேரில் பார்த்து – மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பைச் சொல்லியாகி விட்டது.

நாடாளுமன்றத்திலும் நமது உறுப்பினர்கள்முறையிட்டாகிவிட்டது. ஆனால், இப்போதுகூட பட்ஜெட் தாக்கல் செய்த ஒன்றிய பாஜக அரசு – நமது மக்களுக்கு திட்டங்கள் எதுக்கும் நிதி ஒதுக்க வில்லை. தமிழ்நாட்டுக்கான மெமில்லே திட்டங்களையும் புறக்கணித்திருக்கிறார்கள். திருக்குறளைச் சொல்லித் தமிழர்களை ஏமாற்றிவிடலாம் என்று நினைக்கும் பிரதமர் மோடி திருவள்ளுவர் வாழ்ந்த தமிழ்நாட்டை முற்றிலும் புறக்கணிக்கிறார்.

ஜி.எஸ்.டி. நிலுவைத்தொகை எங்கே? பேரிடர் நிவாரணநிதி எங்கே? தமிழ்நாட்டுக்கானதிட்டங்கள் எங்கே? தமிழ்மொழிக்குரிய முக்கியத்துவம் எங்கே? இதற்கெல்லாம் உங்களிடம் இருந்து பதில் வராது.

வரலாறு காணாத மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டைப் பார்வையிட 21.11.2021 அன்று ஒன்றியக்குழு வந்தது. மாநிலம் முழுதும் சுற்றிப் பார்த்தார்கள். எல்லையும் அவர்கள் கோட்டையில் வந்து சந்தித்தார்கள்.

கேட்ட நிதி தரவில்லை

தமிழ்நாட்டில் கனமழை வெள்ளப் பாதிப்புகளைச் சீரமைக்கத் தற்காலிகமாகச் சீரமைப்புப் பணிகளுக்கு 1,510 கோடி ரூபாயும் நிரந்தரச் சீரமைப்புப் பணிகளுக்காக 4,719 கோடி ரூபாயும் என மொத்தம் 6,230 கோடி ரூபாய் தேவை என்று மூன்று விரிவான அறிக்கைகளை அனுப்பி ஒன்றிய அரசை நாம் கேட்டுக் கொண்டோம். எந்த நடவடிக்கையும் இல்லாததால், டிசம்பர் 29 அன்று, பிரதமருக்கும் கடிதம் எழுதினேன். தேவையான நிதியை விடுவிக்க உள்துறை அமைச்சகத்தை அறிவுறுத்த வலியுறுத்தினேன்.

இன்று பிப்ரவரி 11–ம் தேதி ஆகிவிட்டது. இதுவரை நிதி எதுவும் ஒன்றிய அரசிடம் இருந்து வரவில்லை. ஏற்கனவே கொரோனா காலம் என்பதால் நிதி நெருக்கடி அதிகமாக உள்ளது. வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய அவசியம் மாநில அரசுக்கு இருக்கிறது. இந்தச் சூழலில் மழைவெள்ள பாதிப்புகளுக்கான நிவாரண நிதியைத் தர ஒன்றிய அரசு தாமதிப்பது என்ன நியாயம்?

ஏற்கனவே சரக்கு மற்றும் சேவை வரியான ஜி.எஸ்.டி., என்று சொல்லி முழுக்க முழுக்க நமது நிதி ஆதாரங்கள் ஒன்றிய அரசிடம் போய்விடுகிறது. மாநில அரசுக்கு வர வேண்டிய வருவாய், ஒன்றிய அரசின் கைக்குப் போய்விடுகிறது.

இப்போது, லேட்டஸ்டாக, பத்திரப் பதிவு வருவாயையும் மாநிலங்களுக்குக் கிடைக்காமல் செய்ய ஒரே நாடு ஒரே பத்திரப்பதிவு என்ற திட்டத்தைக் கொண்டு வர இருக்கிறார்கள். மாநில அரசிடம் இவர்கள் விட்டுவைத்திருக்கும் வருவாய்களில் பத்திரப்பதிவு வருவாய் முக்கியமானது ஆகும்.

அதிலும் கைவைக்கிறார்கள் என்றால் மாநில அரசுகளின் நிதி உரிமையை முழுக்க முழுக்க இவர்களே விழுங்கி ஏப்பம்விட்டுப் பார்க்கிறார்களா? பறிக்கப் பார்க்கிறார்களா? பிறகு, மாநிலங்கள் தங்கள் அரசுகளை எப்படி நடத்துவது? மாநிலங்கள் தங்கள் மக்களை எப்படிப் பாதுகாப்பது?

மாநில உரிமைகளை பறிக்க நினைப்பதா?

மாநிலங்களோட உரிமைகளைப் பறிக்க நினைப்பது மூலமாக எதைச் சாதிக்க நினைக்கிறீர்கள்? மாநிலங்கள்தானே இந்த நாடு எனும் அழகிய மாளிகையைத் தாங்கி நிற்கும் தூண்கள்! அதைத்தானே ராகுல் காந்தி, நாடாளுமன்றத்தில் 'Union of States' என்று சொன்னார்! அரசியலமைப்புச் சட்டத்தில் இருப்பதைத்தானே அவர் சொன்னார். அது ஏன் பிரதமர் மோடிக்கு வேப்பங்காயாகக் கசக்கிறது! நீங்களும் குஜராத் முதலமைச்சராக இருந்துவிட்டுத்தானே இப்போது பிரதமராக ஆகியிருக்கிறீர்கள்? அப்போது மாநில உரிமைகளைப் பற்றி நீங்களும் பேசினீர்களே!? இப்போது மறந்துவிட்டீர்களா!

தமிழ்நாட்டு மக்களின் நலனை மனதில் வைத்து தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பை காப்பாற்ற ஏழை எளிய கிராமப்புற மாணவர்களின் மருத்துவக் கல்வியில் கனவைக் காப்பாற்ற நீட் விலக்கு மசோதாவை மாநிலச் சட்டமன்றம் ஒருமனதாக நிறைவேற்றி அனுப்பினால் நியமனப் பொறுப்பான கவர்னரை வைத்துக்கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் குரலைப் புறந்தள்ளிடலாம் என்று நினைக்கிறீர்களா? உங்கள் கனவு தமிழ்நாட்டில் நிச்சயம் பலிக்காது!

மருத்துவக்கல்விக்கானநீட் தேர்வைக் கடுமையாக எதிர்த்து, தமிழ்நாட்டுக்குள் வராமல் தி.மு.க. தடுத்தது. அம்மையார் ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோதும் எதிர்த்தாங்க. இதை நான் சட்டமன்றத்திலேயே பதிவுசெய்திருக்கிறேன். ஆனால், பழனிசாமி ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, தமிழ்நாட்டு உரிமைகளை விட்டுக்கொடுத்து அடிபணிந்து போனார். முதன்முதலில் தமிழ்நாட்டு மாணவர்களை நீட் தேர்வு எழுத வைத்தது பழனிசாமிதான்! அப்படித்தானே நீட் தேர்வு தமிழ்நாட்டுக்குள் நுழைந்தது. தமிழர்களுக்கும் தமிழ்நாட்டுக்கும் எதிரான எந்தச் செயல்கள் நடந்தாலும் முதலில் எதிர்ப்பது தி.மு.க.தான்.

பதில் எங்கே?

தமிழர்களின் உணர்வோடு கலந்துவிட்ட பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டுக்கு ஆபத்து வந்தபோது அதற்கான போராட்டத்தை மட்டுமின்றி 'நீட்'டுக்கு எதிரான போராட்டத்தையும் சேர்த்தே நடத்தியதுதான் தி.மு.க. கடந்த தி.மு.க. ஆட்சிக்காலத்தில் தமிழ்நாட்டில் எந்தத் தேர்வு மையத்தில் நீட் நடந்தாலென்ன ஒரு தேர்வு மையத்தின் பெயரையாவது சொல்வதற்கு நிராணி இருக்கிறதா?

அதற்கு முதலில் பதில் சொல்லுங்கள். உங்களால் சொல்ல முடியாது. ஏன் என்றால், முதல் நீட் தேர்வு நடந்ததே உங்க ஆட்சியில்தான். நான் இப்போதும் சொல்கிறேன். நீங்கள் ஒரே ஒரு தேர்வு மையத்தின் பெயரைச் சொல்லுங்கள். பொதுவிவாதத்துக்கு தேதியையும் மேடையையும் நான் சொல்கிறேன். புதிதாகப் பொய்மூட்டை எதையாவது எடுத்துக்கொண்டு வந்து தமிழ்நாட்டு மக்கள் முன்னால் கொட்டலாம் என்று நினைக்கவேண்டாம். உங்களது பொய்களைக் கேட்டுக் கேட்டு வெறுத்துப்போய்விட்டது என்று மக்கள் சொல்கிறார்கள்.

இலங்கை கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுகிறார்கள். தமிழ்நாடு மீனவர்களுக்குச் சொந்தமான மீன்படிப் படகுகளை ஏலம் விடுவதற்கு இலங்கை அரசு முயற்சி எடுக்கிறது. அதனை உடனடியாகத் தடுக்க வேண்டும் என்று பிரதமர் மோடிக்கும் ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கும் கடிதங்கள் எழுதி இருக்கிறேன்.

இலங்கைக் கடற்படை தொடர்ந்து தனது அத்துமீறலை நடத்தி வருகிறது. தமிழ்நாட்டு மீனவர்களுக்கு சொந்தமான 205 மீன்பிடி படகுகள் அவர்கள் வசம் உள்ளது. இதனை ஏலம் விடப்போவதாக செய்தி வெளியாகி உள்ளது. இலங்கை அரசின் இந்த நடவடிக்கை சட்டத்திற்குப் புறம்பானது. இதனைத் தடுக்க வேண்டிய கடமை ஒன்றிய பாஜக அரசுக்கு இருக்கிறது.

கைது செய்யப்படும் தமிழ்நாடு மீனவர்கள் இந்தியக் குடிமக்கள் தானே? இதுபற்றி ஜூனவரி மாதம் நான் எழுதிய கடிதத்துக்கு இந்திய வெளியுறவு அமைச்சகம் பதில் அனுப்பி இருந்தது. இந்த விவகாரம் தொடர்பாக இலங்கை அதிகாரிகளிடம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், அறிவிக்கப்பட்ட மீன்பிடிப் படகுகள் ஏலத்தை இலங்கைக் தரப்பு தொடராது என்று அவர்கள் உறுதி அளித்திருப்பதாகவும் சொன்னார்கள்.

ஆனால் அந்த வாக்குறுதியை இலங்கை அரசு மீறுவதை, இந்திய அரசு வெளிப்படையாகவே கண்டிக்க வேண்டும். மீட்க முடியாத நிலையில் உள்ள இந்த மீன்பிடிப் படகுகள் உரிய நீதித் துறை நடைமுறைகளைப் பின்பற்றி, பல்வேறு இலங்கை நீதிமன்றங்களால் விடுவிக்கப்பட்டவைதான். ஆனாலும் அத்துமீறிச் செயல்படுகிறார்கள்.

2018–ம் ஆண்டுக்கு முன் சிறைப்பிடிக்கப்பட்ட 125 படகுகள் அங்குதான் இருக்கிறது. இவை பழுது பார்க்க இயலாத அளவுக்கு சேதம் அடைந்தவை ஆகும். இதனை என்ன செய்வது என்பது குறித்து நமது அதிகாரிகள் அங்கு சென்று ஆய்வு நடத்த வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழை வளப்படுத்துவதாக இருந்தாலும் தமிழர்களைக் காப்பதாக இருந்தாலும் தமிழ்நாட்டை மேம்படுத்துவதாக இருந்தாலும் அனைத்திலும் 100–க்கு 100 தன்னை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டவனாக இயக்கம், தி.மு.க. தான்! இது தமிழ்நாட்டு மக்கள் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். எனவே, சமத்துவம் மதச்சார்பின்மை மொழியுணர்வு பொதுவுடைமை ஆகியவை சங்கமித்துள்ள குமரி மக்களிடம், 'உள்ளாட்சியிலும் மலரட்டும் நம்ம ஆட்சி' என்று ஆதரவு கேட்கிறேன்.

இவ்வாறு ஸ்டாலின் பேசினார்.

தமிழகத்தில் நேற்று 3 ஆயிரம் பேருக்கு கொரோனா

சென்னை, பிப்.12

தமிழகத்தில் 3 ஆயிரத்து 86 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் நேற்றைய கொரோனா பாதிப்பு குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:

தமிழகத்தில் நேற்று புதிதாக 1 லட்சத்து 1,830 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. இதில் 1,840 ஆண்கள், 1,246 பெண்கள் என மொத்தம் 3 ஆயிரத்து 86 பேருக்கு புதிதாக கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் அதிகபட்சமாக சென்னையில் 590 பேரும், கோவையில் 569 பேரும், செங்கல்பட்டில் 261 பேரும், திருப்பூரில் 193 பேரும், ஈரோட்டில் 154 பேரும், சேலத்தில் 165 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறைந்தபட்சமாக திருப்பத்தூரில் 7 பேரும், மயிலாடுதுறை, தென்காசி, பெரம்பலூரில் தலா 5 பேரும் உள்பட 25 மாவட்டங்களில் பாதிப்பு 50க்கு கீழ் குறைந்துள்ளது.

இதில் 12 வயதுக்குட்பட்ட 126 குழந்தைகளுக்கும், 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் 456 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் இதுவரை 6 கோடியே 19 லட்சத்து 36 ஆயிரத்து 291 பேருக்கு பரிசோதனை செய்யப்பட்டு, 34 லட்சத்து 31 ஆயிரத்து 154 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நேற்றைய நிலவரப்படி 3 ஆயிரத்து 406 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 1,617 பேர் ஆக்சிஜன் வசதி கொண்ட படுக்கைகளிலும், 556 பேர் தீவிர சிகிச்சை பிரிவிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர். தமிழகத்தில் அரசு ஆஸ்பத்திரியில் 11 பேரும், தனியார் ஆஸ்பத்திரியில் 14 பேரும் என 25 பேர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளனர். அதிகபட்சமாக சென்னையில் 6 பேரும், திருவள்ளூரில் 3 பேரும், சேலம், 23 மாவட்டங்களில் உயிரிழப்பு இல்லை.

இதில் கரூர் மாவட்டத்தை சேர்ந்த 15 வயது சிறுவனுக்கு 25 நாட்களுக்கு மேலாக காய்ச்சல் இருந்ததால், கடந்த 7ந் தேதி திருச்சியில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பரிசோதனை முடிவில் சிறுவனுக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. இந்தநிலையில், சிறுவனுக்கு கொரோனா சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் சிறுவன் உயிரிழந்தான். உயிரிழந்த சிறுவனுக்கு எந்தவித இணை நோய் பாதிப்பும் இல்லை. மற்ற 24 பேர் இணை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஆவர்.

தமிழகத்தில் இதுவரை மொத்தம் 37 ஆயிரத்து 887 பேர் கொரோனா நோய் தொற்றால் உயிரிழந்து உள்ளனர். இத்தொற்று பாதிப்பில் இருந்து நேற்று 14 ஆயிரத்து 51 பேர் 'டிஸ்சார்ஜ்' செய்யப்பட்டுள்ளனர். சிகிச்சையில் 56 ஆயிரத்து 2 பேர் உள்ளனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



சென்னை, கிண்டி குழந்தைகள் தேசிய உயிரியல் பூங்கா வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் அண்ணா பல்கைக்கழகம் பருவநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை மையம் சார்பாக தமிழ்நாடு வனத்துறை அதிகாரிகளுக்கு வானவியலில் காா்பன் தன் மயமாதல் பற்றிய இரண்டு நாள் பயிலரங்கம் நடைபெற்றது. இரண்டு நாள் பயிலரங்கை முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் அரசு ஏப்பர் கழக தலைவர் சையது முஸ்மில் அப்பாஸ் மற்றும் வனத்துறை முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் வனத் துறைத் தலைவர் அசோக் உப்ரிதி ஆகியோர் துவக்கி வைத்தார்கள். உதவி தலைமை வகப் பாதுகாவலர் அனுராக் மிஸ்ரா, சென்னை மண்டல வனப் பாதுவாகாவலர் கே.கீதாஞ்சலி, மாநில திட்டக்குழு நிலங்கள் பயன்பாடு பிரிவு தலைவர் எஸ்.கதா, அண்ணா பல்கலைக்கழக சிறப்பு பேராசிரியர் ஆ.இராமச்சந்திரன் ஆகியோர் உள்ளனர்.

ஊரடங்கில் மேலும் தளர்வு...

(11ம் பக்கத் தொடர்ச்சி)

கூடுதலாக அறிவிக்கலாம் என ஆலோசிக்கப்பட்டது.

கடைகளுக்கு தளர்வு

தற்போது மழலையர் பள்ளிகள், நர்சரி பள்ளிகள் செயல்படவும், அரசு, தனியார் கலை விழாக்கள், பொருட்காட்சிகள் நடத்தவும் தடை உள்ளதால் இதை விலக்கிக்கொள்ள அறிவிப்பு வெளியிடலாம் என தெரிகிறது.

உணவகங்கள், விடுதிகள், ஓட்டல்கள், ஜவுளிக்கடைகள், நகைக்கடைகளில் ஒரே நேரத்தில் 50 சதவீத வாடிக்கையாளர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனர்.

இதேபோல் சினிமா தியேட்டர்களிலும் 50 சதவீத பார்வையாளர்களுக்கு மட்டுமே அனுமதி என்ற கட்டுப்பாடுகள் அமலில் இருப்பதால் இதிலும் தளர்வுகள் அறிவிக்கப்படலாமா? என்றும் ஆலோசிக்கப்பட்டது.

கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்த வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வருவதால் அது பற்றியும் இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

தற்போது தேர்தல் பிரச்சார சமயமாக உள்ளதால் அரசியல் கூட்டங்கள் நடத்த கட்டுப்பாடுகளுடன் அனுமதி வழங்கலாமா? என்று விரிவாக ஆலோசிக்கப்பட்டது. எனவே இன்று மாலையில் இது சம்பந்தமாக அறிவிப்புகள் வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுபற்றி அரசு உயர் அதிகாரி கூறும்போது, கொரோனா பாதிப்பு குறைந்து வரும் நிலையில் இளியும் அதிக கட்டுப்பாடுகள் இருந்தால் சரியாகாது. மக்களின் பொருளாதார வாழ்வாதார பிரச்சினைக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையில் கூடுதல் தளர்வுகள் அறிவிக்கப்படல வாய்ப்புள்ளது என்று தெரிவித்தார்.

ஈசாப் இந்தியா லிமிடெட்

CIN:L29299TN1987PLC058738

பதிவு அலுவலகம் : பிளாட் எண் 13, 3வது பிரதான சாலை, சிப்காட் தொழிற்பேட்டை, சென்னை- 600 058.
தொ.பே எண் 044-4228 1100, இ-மெயில்: investorrelations@esab.co.in

ESAB

டிசம்பர் 31, 2021 வரை முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

ரூ. லட்சங்களில் (EPS தவிர)

வ.எண்	விவரங்கள்	முடிவடைந்த காலாண்டு	முடிவடைந்த காலாண்டு	முடிவடைந்த காலாண்டு	முடிவடைந்த ஒன்பது மாதங்கள்	முடிவடைந்த ஒன்பது மாதங்கள்	முடிவடைந்த ஆண்டு
		டிசம்பர் 31, 2021	செப்டம்பர் 30, 2021	டிசம்பர் 31, 2020	டிசம்பர் 31, 2021	டிசம்பர் 31, 2020	மார்ச் 31, 2021
		(தணிக்கை செய்யப்படாதது)	(தணிக்கை செய்யப்படாதது)	(தணிக்கை செய்யப்படாதது)	(தணிக்கை செய்யப்படாதது)	(தணிக்கை செய்யப்படாதது)	(தணிக்கை செய்யப்பட்டது)
1	மொத்த செயல்பாடுகள் மூலம் வருமானம் (வரிக்கு முன், சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு முன்)	22,804	22,386	18,701	63,504	48,388	69,234
2	இக்காலத்திற்கான நிகர லாபம் (வரிக்கு முன், சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு முன்)	2,581	3,193	1,975	8,492	5,315	8,053
3	இக்காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்)	2,581	3,193	1,975	8,492	5,315	8,053
4	இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்)	1,897	2,366	1,471	6,298	3,957	5,929
5	இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [இக்காலத்திற்கான வருமானம் உள்ளடக்கிய லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்)]	1,897	2,366	1,464	6,298	3,937	5,847
6	சமபங்கு மூலதனம்	1,539	1,539	1,539	1,539	1,539	1,539
7	பங்கு விகித ஈட்டுத்தொகை (ஒவ்வொரு பங்கு ரூ.10/-) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்) அ) அடிப்படை	12.32	15.37	9.56	40.91	25.71	38.52
	ஆ) குறைமதிப்பு	12.32	15.37	9.56	40.91	25.71	38.52

குறிப்பு : மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015–ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33–வது விதிமுறையின் கீழ் பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள டிசம்பர் 31,2021–ன் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் தேர்ந்தெடுக்கப்பட்டவைகள் ஆகும். காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் கம்பெனியின் www.esabindia.com என்ற இணையதளத்திலும், பங்கு வர்த்தக நிறுவனத்தின் BSE Limited மற்றும் National Stock Exchange of India Limited என்ற இணையதளத்திலும் காணலாம்.

சென்னை
10 பிப்ரவரி, 2022

"We Shape the Future"
Visit our website : http://www.esabindia.com

ஈசாப் இந்தியா லிமிடெட்டுக்காக
ரோஹித் கம்பர்
மேலாண்மை இயக்குனர்

NOTICE

sf | SUNDARAM MUTUAL

RECORD DATE FOR INCOME DISTRIBUTION CUM CAPITAL WITHDRAWAL (IDCW)

NOTICE is hereby given that Sundaram Trustee Company Limited, the Trustee to Sundaram Mutual Fund, has declared Income Distribution cum capital withdrawal (IDCW) on the face value of ₹ 10/- under the following scheme:

Scheme Name	Plan - Option	Record Date#	Amount of IDCW* (₹ per unit)	NAV per unit as on February 11, 2022 (₹)
Sundaram Aggressive Hybrid Fund	Regular Plan - IDCW	February 17, 2022	0.260	28.1159
	Direct Plan - IDCW		0.377	40.6998

 # Or subsequent business day if the specified date is a non-business day.

** Income Distribution will be done/IDCW will be paid, net of tax deducted at source, as applicable.*

Pursuant to the payment of IDCW, the NAV of the scheme will fall to the extent of payout and statutory levy, if applicable. The IDCW payout will be to the extent of above mentioned IDCW per unit or to the extent of available distributable surplus, as on the Record Date mentioned above, whichever is lower. Past performance may or may not be sustained in future. All unitholders under the IDCW Option of the above-mentioned scheme, whose name appears on the Register of Unitholders on the aforesaid Record Date, will be entitled to receive the IDCW. The above stated quantum of IDCW and the Record Date were approved by the Board of Directors of Sundaram Trustee Company Limited vide their resolution dated February 11, 2022.

For **Sundaram Asset Management Company Ltd**
R Ajith Kumar
Secretary & Compliance Officer

Place: Chennai
Date: February 12, 2022

For more information please contact:
Sundaram Asset Management Company Ltd
(Investment Manager to Sundaram Mutual Fund)
CIN: U93090TN1996PLC034615

Corporate Office: 1st & 2nd Floor, Sundaram Towers, 46, Whites Road, Royapettah, Chennai-14.
Contact No. (India) 1860 425 7237, (NRI) +91 40 2345 2215
Fax: +91 44 2841 8108. www.sundarammutual.com
Regd. Office: No. 21, Patullos Road, Chennai 600 002.

Mutual Fund investments are subject to market risks, read all scheme related documents carefully.

Kumbhat Financial Services Limited

Regd. Office : 5th Floor , Kumbhat Complex, No : 29 Ratan Bazaar, Chennai - 600 003.
Phone Number : 044-2533 2173. Email Id : cs@kumbhatfinancialservicesltd.com
CIN : L65991TN1993PLC024433

UNAUDITED FINANCIAL RESULTS FOR THE THIRD QUARTER ENDED 31.12.2021

(Rs.in Lakhs)

Sl. No.	Particulars	Quarter Ended			Nine Months Ended		Year Ended
		31.12.2021	30.09.2021	31.12.2020	31.12.2021	31.12.2020	31.03.2021
		Unaudited	Unaudited	Unaudited	Unaudited	Unaudited	Audited
1	Total Income from Operations	7.05	5.43	1.29	22.89	18.46	16.97
2	Net Profit / (Loss) for the period (before Tax and Exceptional items)	1.90	1.54	(2.13)	3.23	11.53	(87.05)
3	Net Profit / (Loss) for the period before tax (after Exceptional items)	1.90	1.54	(2.13)	3.23	11.53	(87.05)
4	Net Profit / (Loss) for the period after tax (after Exceptional items)	1.32	0.99	(2.66)	1.72	7.38	(87.76)
5	Total Comprehensive Income for the period [Comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)]	1.32	0.99	(2.66)	1.72	7.38	(87.76)
6	Equity Share Capital	475.00	475.00	475.00	475.00	475.00	475.00
7	Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year	-49.55					
8	Earnings Per Share (of Rs.10/- each) (for continuing and discontinued operations): (Not Annualised) 1) Basic: 2) Diluted:	0.03 0.03	0.02 0.02	(0.06) (0.06)	0.04 0.04	0.16 0.16	(1.85) (1.85)

Notes:

a. The above is an extract of the detailed format of Quarterly/Annual Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly/Annual Financial Results are available on the websites of the Stock Exchange(s) and the listed entity. (www.kumbhatfinancialservicesltd.com).

b. The financial statements have been prepared under Ind-As from 01.04.2019 as required by section 133 of Companies Act,2013.

Place : Chennai
Date : 11.02.2022

for Kumbhat Financial Services Limited
SANJAY KUMBHAT
Managing Director